**மெதகம பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மெதகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம் ரூபா 30,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | பெறவேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பெறவேண்டிய வருமானமாக இனங்காண முடியாதிருந்தமையால் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கி நிலுவைப் பணம் அறவிடப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் வரை சபை செயலாளர் படியாகச் செலுத்தப்பட்ட மாகாண சபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 74,160 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பெறவேண்டியதாக இனங்காண முடியாதிருந்தமையால் கணக்கீடு செய்ய முடியாதிருந்தவை 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மெதகம விளையாட்டு மைதானத்தின் விளையாட்டரங்கின் படிக்கட்டுக்களை நிர்மாணிக்கும் செலவினம் ரூபா 67,723 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறைத்துப் பதியப்பட்டமை சீராக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | i. | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்ட 35 கட்டிட திட்டங்களுக்குரிய நிர்மாணங்களைப் பரீட்சித்தலோ அல்லது தரச் சான்றிதழ் விநியோகித்தலோ இடம்பெறவில்லை. | வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய நபர்களினால் தரச் சான்றிதழ் பெறப்பட்டுக் கொண்டிருந்ததுடன் பெறாத நபர்கள் தொடர்பாக விசாரணை செய்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். முறையான விடயங்களை பூர்த்தி செய்யாத திட்டங்களுக்காக சான்றிதழ் விநியோகிக்க முடியாதுள்ளது. |
| | ii. | பிரதேச சபை அதிகாரப் பிரசேத்தில் மேற்கொள்ளப்பட்ட 21 நிர்மாணங்கள் தொடர்பாக திட்டமிடல் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | களப் பரிசோதனையொன்று மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது டன் ஒரு பகுதிக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஏனைய நிர்மாணங்களை மீண்டும் பரீட்சித்து |

நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,915,221 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,458,867 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 215,538 | 215,538 | 128,328 | 87,210 | 215,538 | 215,538 | 157,168 | 58,370 |
| (ii) | வாடகை | 600,000 | 556,120 | 556,120 | - | 500,000 | 611,720 | 611,720 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 400,000 | 349,700 | 349,700 | - | 400,000 | 342,960 | 342,960 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 20,876,895 | 16,858,904 | 16,512,181 | 346,723 | 17,634,351 | 15,608,556 | 15,341,273 | 267,283 |
| | மொத்தம் | 22,092,433 | 17,980,262 | 17,546,329 | 433,933 | 18,749,889 | 16,778,774 | 16,453,121 | 325,653 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 133,278 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 112,123 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | விசேட கவனமொன்றைச் செலுத்துமாறு வருமானப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நடமாடும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 215,538 தொகையான ஆதனவரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 87,210 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | விசேட கவனமொன்றைச் செலுத்துமாறு வருமானப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நடமாடும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்ட 03 ஆதனங்களுக்காக அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 173,198 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 42,046 நிலுவைப் பணம் அறவிடப்பட்டுள்ளது. |

## 2.2.3 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்டகாலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட 142 கடைகளுக்கு இறுதியாக 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேனும் வாடகை அறவிடப்படாமல் 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியில் 40 சதவீதம் சேர்க்கப்பட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு மேற்கொண்டு 05 வருடங்களுக்கு அதிக காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்படாமையினால் ரூபா 9,021,484 தொகையான வருமானமொன்றை சபை இழந்திருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். | கடைகளை புதிதாக மதிப்பீடு செய்வதற்கு 2019 ஏப்ரல் 22 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து வருகை தந்ததுடன் அதன் பிரகாரம் புதிய மதிப்பீடு பெறப்பட்டதன் பின்னர் புதிய மதிப்பீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட 157 கடைகளுக்காக அறவிடவேண்டிய நிலுவை வாடகை ரூபா 125,611 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 ஆந் திகதிவரையில் நிலுவைத் தொகையில் ரூபா 95,355 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,642,210 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 1,869,372 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,284,943 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,144,309 தொகையும் அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 05 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | ஏனைய விடயங்களுக்காக எதிர்காலத்தில் உப விதி தயாரிக்கப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியுமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிறுவனத்திற்குரிய இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப்பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 34 தொழில்முயற்சிகளுக்காக உரிய நடவடிக்கைகளைச் செய்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. | இந்த தொழில்முயற்சிகளை பரீட்சித்து குறித்த கட்டணத்தை அறவிட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரம் பெறவேண்டியவர்களுக்கு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பதவியணியினர் அங்கீகரிக்கப்படாமை | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 05 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சியிருந்த 08 ஊழியர்களின் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மிகை பதவியணியின் பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் | மாதாந்தம் பதவியணியின் தகவல்கள் அறிக்கை மூலம் உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) பதவியணியினர் வெற்றிடம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சபையில் 06 பதவிகளில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | மாதாந்தம் பதவியணியின் தகவல்கள் அறிக்கை மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 3.4.1 | சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற வீதிகள் பதிவேட்டின் பிரகாரம் 225 வீதிகள் காணப்பட்ட போதிலும், அதில் 116 வீதிகளை வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 32 ஏக்கர் 18 பேர்ச் அளவான 46 காணிக் கூறுகளின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான 42 காணிக் கூறுகள் அளவை நடவடிக்கை செய்யப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளின் அளவை அளவீடுசெய்து சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து காணியைக் கையேற்பதற்கும், அளத்தல் நடவடிக்கைகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் |

### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கை உழவு இயந்திரம் | பயன்பாட்டிற்கு எடுத்தல் அல்லது | பழுதுபார்ப்பதற்கு கூறுவிலை கோரப்பட்டுள்ளதுடன் |

| | | |
|---|---|---|
| மற்றும் மண் செப்பனிடும் இயந்திரம் என்பன முறையே 2012 மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | அவ்வாறில்லையாயின் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்தப்படும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 18 பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது செயல்நடவடிக்கைத் திட்டத்தை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, நிலுவை வாடகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுத்தலுக்கான கிரயம் அதிகரித்தமை, நிர்மாணங்களை நிறைவேற்றுவதற்கு நிதி போதியளவில் இல்லாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 03 வருமான விடயங்களில் 22 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையும், 05 செலவின விடயங்களில் 13 சதவீதம் | சரியான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய வேண்டும். | இயந்திரங்களை வாடகைக்கு விடுவதற்காக வீதிகளைப் பராமரிப்பதற்கு ஏற்பட்டமை, வருமானத்திலிருந்து மேற்கொள்கின்ற கொடுப்பனவுகளை செலவினத் தலைப்புக்களில் சீராக்குதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் முரண்கள் ஏற்பட்டிருந்தது. |

முதல் 219 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் காணப்படவில்லை. |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்து நடாத்திச் செல்லல் வேண்டும். | 2016 மார்ச் 24 ஆந் திகதி குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2018 இன் 02 காலாண்டின் கூட்டங்கள் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்டுள்ளது. |